# கத்தோலிக்க திருமறை
# தரம் 1

# முதலாம் தவணை



## ஆசிரியர் வழிகாட்டி

முன் பிள்ளை அபிவிருத்தி மற்றும் ஆரம்பநிலைக் கல்வி திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

## கலைத்திட்டக்குழு

ஆலோசனையும் அனுமதியும் : பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரண
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

கலாநிதி தர்சன சமரவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழி மானுடவியல் மற்றும் சமூகவியல் துறை,
தேசிய கல்வி நிறுவகம்

மேற்பார்வை: திருமதி. ஆர்.எம்.கே. டி சில்வா, பணிப்பாளர்,
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

பாட இணைப்பாக்கம் : திருமதி லக்மாலி ஆந்தகொட,
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

எழுத்தாளர் குழு : திருமதி பீ.டீ.பிலிஷியா அயரின்,
வலயக் கல்வி அலுவலகம், களனி
திருமதி எம்.பீ.டபிள்யு.வி.சியாமளி பீரிஸ்,
பிலபிட்டிய ஜனாதிபதி
வித்தியாலயம், பிலபிட்டிய,
திருமதி டீ.எம்.பீ.மதுராவல, வலயக் கல்வி அலுவலகம்,
மினுவாங்கொட
திருமதி கே.டீ.பி.கருணாநாயக்க,
திருச்சிலுவை வித்தியாலயம், கம்பஹா
திருமதி எச்.பீ.சி.நிலந்தி, மே.மா/கள/புனித அன்னம்மாள்
மகளிர் பாடசாலை, வத்தளை

வழிகாட்டல் : அருட்தந்தை எல்.பி.கே.எல்.பர்னாந்து,
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்
அருட்தந்தை ரொயிஸ்டன் பீரிஸ் புள்ளே,
உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்
அருட்சகோதரி எஸ்.வி.கிருஷாந்தி பர்னாந்து,
திருக்குடும்பக் கன்னியர் மடம், தெஹிவலை

தமிழ்மொழியாக்கம் : திருமதி ஷீலா ஸ்ரீதரன்
ஆசிரியர் (ஓய்வுநிலை)

சித்திரம் மற்றும் முன்னட்டைப் படம் : திருமதி கே.ஆனா மரி பெரேரா,
திருக்குடும்பக் கன்னியர்மடம், பம்பலப்பிட்டி

கனணி வடிவமைப்பு : ரட்ணராஜா தனுஷா,
வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

## உள்ளடக்கம்

### முதலாம் தவணை


**எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு**

பாடம் 1 - அற்புதமான படைப்பு - 1

பாடம் 2 - எமது ஆதிப் பெற்றோர் - 6

**எண்ணக்கரு - சமூக கலாசார உணர்வு**

பாடம் 3 - தேவாலயம் செல்வோம் - 9

பாடம் 4 - திருச் சிலுவை - 12

**எண்ணக்கரு - வணக்க முறைமை, ஒழுகலாறு இணக்கப்பாடு**

பாடம் 5 - திருச்சிலுவையை வரைவோம் - 16

**எண்ணக்கரு - பலம் மற்றும் ஆரோக்கியம் கொண்ட நன்னடத்தை**

பாடம் 6 - பலத்துடன் நடப்போம் - 19

## அறிமுகம் - சமயம் மற்றும் ஒழுகலாறு - ஆரம்பக்கல்வி

பன்முக பண்பாட்டுக் கலாசாரங்கள் கொண்ட சமூகத்தினருக்குச் சமயம் கற்பித்தல் என்பது பிரச்சினைக்குரிய செயற்பாடாகும். பல்வேறுபட்ட சமயங்களின் நம்பிக்கைகள் மற்றும் அதற்கான பிரயோக நடவடிக்கைகளில் வேறுபாடுகள் உள்ளன. அதனால் அந்தந்தச் சமய நிறுவனம் சார் ஒழுங்கமைப்பில் பல்வகையான வழிபாட்டு முறைகளைப் பல்வேறுவிதமாக கடைப்பிடிப்பதன் காரணமாக அவர்கள் அனைவரையும் ஒரே வலையமைப்பிற்குள் இணைப்பது இயலாத காரியமாகின்றது. தேசிய பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தில் அவை எதிர்மறையான பல விளைவுகளை உருவாக்குகின்றன. எனவே, மாற்றுவழியில் இதற்கான தீர்வை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. அதற்காக, தேசிய கல்விப் பரப்பில் சமயம் மற்றும் விழுமியம் சார் கல்வியானது எவ்வாறு உதவியாக அமைந்துள்ளது என்பதை தெளிவுபடுத்துவது தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் பிரதான குறிக்கோளாகும்.

சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் இறுதி நோக்கமாவது; பிள்ளையின் வயது வரம்பிற்கேற்ப சமயக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதாகும். எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களது அறிவு, இதயம், உறுப்புகள், உள்ளம் ஆகியவற்றுடன் சமநிலை கொண்ட மனப்பாங்கினை விருத்தி செய்வதன் ஊடாக எதிர்கால உலகை வெல்லக்கூடிய ஒழுக்கம் கொண்ட ஆக்கபூர்வமான பிரஜையை உருவாக்கி சமூகத்திற்கு முன்வைக்க வேண்டியது இன்றியமையாத தேவையாகின்றது.

பிரதான ஐந்து சமூக - சமய எண்ணக்கருக்களின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்விக்கான பாடத்திட்டச் சட்டகத்தில் கல்வி விருத்தியைப் போலவே தனியாள் விருத்திக்கும் அவசியமான பிரதான திறன்களை மேம்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க வருங்காலச் சவால்களுக்கு உத்வேகத்துடனும் தைரியத்துடனும் முகங்கொடுக்கக்கூடிய வினைத்திறனுடைய நபர்களை சமூகத்திற்கு வழங்குவதற்கு ஏற்ற அவசியமான அடித்தளத்தை ஆரம்பக்கல்வியில் இருந்தே கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இப்பாடத்திட்டச் சட்டகத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஆரம்பக்கல்விக்கான கத்தோலிக்க திருமறை பாடத்திட்டத் தயாரிப்பின்போது உரிய தரங்களில் கற்கின்ற மாணவர்களின் வயது மட்டம், முதிர்ச்சி, மொழியாற்றல், இரசனை, விருப்பு ஆகியன தொடர்பாகக் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. உரிய கற்றல் பேறுகளை எய்தும் பொருட்டு, அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவங்களைப் பெறுகின்ற விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு சிறு பிள்ளைக்கு கத்தோலிக்க திருமறையை மிகவும் பொறுப்புடன் அவதானமாகக் கற்பிக்க வேண்டும். சிறுபராயத்திலே ஏதேனும் மிகச் சிறியதொரு விடயம் தொடர்பாக தவறான புரிதல் ஏற்படுமாயின் அது அப்பிள்ளையின் முழு வாழ்க்கையில் மட்டுமல்ல நித்திய வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கு சந்தேகமான அல்லது புரியாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தெளிவுபடுத்திக்கொண்டு சரியான விளக்கத்தை பிள்ளைகளுக்கு அளிப்பதோடு தாமும் அதற்கென முன்கூட்டியே தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் தானும் கிறிஸ்துவோடு ஒன்றித்து அவரைப் பின்பற்றி வாழ வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். ஒவ்வொரு ஆசிரியரும் முறையாக கால அட்டவணை தயாரித்து அதன்பிரகாரம் செயற்படும்போது பிள்ளைகளுக்கு மிகவும் ஏற்ற மகிழ்ச்சியான கற்றல் சூழல் ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு**

ஆரம்பக்கல்வித் தரங்களில் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்கும்போது சிறு பிள்ளைகள் விரும்பக்கூடிய சமய வாழ்வு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்த வேண்டும். வழிபாடு, சமயச் சுற்றுலா, தேவாலயங்களைத் தரிசித்தல் என்பன இவ்வொழுங்குமுறையில் பிரதான இடம் வகிக்கின்றன. மேலும், உவமைகள், சுயசரிதை, மீட்பின் வரலாறு தொடர்புபட்ட கதைகளை இரசிக்கும் விதத்தில் முன்வைக்கவேண்டும். இவை தொடர்பான பாடல்கள், நடிப்பு, சித்திரம் தீட்டுதல், போன்ற அழகியல் செயற்பாடுகளில் மாணவரை அதிகளவில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அதனால் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மாணவருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அழகிய அனுபவமாக அமைவதோடு, கத்தோலிக்க திருமறையைக் கற்றுக்கொள்வதில் அதிக விருப்பமும் மாணவர் மத்தியில் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**பாடசாலைக் கொள்கை மற்றும் வேலைத்திட்டம்**

பாடசாலைக் கலாசாரத்துடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களில் கத்தோலிக்க திருமறை பாடத்துக்குரிய எண்ணக்கருவைப் அதிகளவில் கட்டியெழுப்ப முடியும். பாடசாலைக் கலாசாரத்தில் இத்தகைய எண்ணக்கருவைக் கட்டியெழுப்பும் புதிய அம்சங்களின் உருவாக்கம் தொடர்பில் அதிபர்களது விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் காலை வழிபாட்டு முறைமை இதில் பிரதான இடம் பெறுகின்றது. இந்த வேலைத்திட்டம் முதலாம் தரத்தில் மிகவும் எளிமையான முறையில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாம் தரம் வரையில் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு தொடர்ந்து பல்வேறு அம்சங்களை இணைத்துக்கொள்ள முடியும்.

ஆசிரியர் மாணவர்களைத் தவணைக்கு ஒருதடவையேனும் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு இடம்பெறுகின்ற வழிபாட்டு விதிமுறைகள் மாணவர் மத்தியில் ஆர்வத்தையும் பக்தியையும் உருவாக்கும். இச்செயற்பாடுகளால் பொதுநிலையினர் மற்றும் துறவறம் காப்பவர்கள் இடையே தொடர்பாடல் விருத்தியடைவதன் ஊடாகச் சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அது ஏதுவாக அமைகின்றது.

தனியாள் தூய்மை, ஒழுக்கம், கருணை, இரக்கம், ஆசீர்வாதம் என்றவாறு கட்டியெழுப்பப்படும் சமத்துவம், நல்லிணக்கம், ஒத்துழைப்பு ஆகிய பண்புகளால் பாடசாலைக் கலாசாரம் ஊட்டம் பெறுகின்றது. அது போன்ற கலாசாரத்தில் சமயம் மற்றும் ஒழுகலாறு போன்ற விடயங்களில் எதிர்பார்க்கப்படும் அவசியமான கற்றல் எண்ணக்கருக்களை உறுதிசெய்து கொள்வது மிக

இலகுவாக அமையும். அவ்வாறான சூழ்நிலை ஏற்படும்போது பாடம் தொடர்பாகக் கற்றுக்கொண்ட அனைத்தையும் பிரயோகமுறையில் செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

**கணிப்பீடு**

ஆரம்பக் கல்வித் தரங்களில் எழுத்துச் சோதனைகளை விட பிரயோகச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு பிரதான இடம் பெறுகின்றது. அவதானிப்பு, கண்டறிதல், திருத்தலப் பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், உரையாடல், வாய்மூல வினாக்கள் போன்ற கணிப்பீட்டு முறை என்பன இதற்கு ஏற்புடையதாகும்.


**சமயம் மற்றும் ஒழுகலாறு சார் பாடத்தின் நோக்கம்**

நிலைபேறு கொண்ட சமாதான மேம்பாட்டை எய்துவதற்காக பரந்துபட்ட விளக்கம் உடையவரும் பல்வகைமைக்கு மதிப்பளிக்கக்கூடிய மனவெழுச்சியுடன் சமநிலை பேணுபவரும் ஜனநாயகம் மற்றும் ஒழுக்கம் பேணுபவருமான உலகளாவிய ரீதியிலான பிரசையொருவரை உருவாக்குதல்.

**சமயம் மற்றும் விழுமியக்கல்வி பாடக் கற்பித்தலில் எதிர்பார்க்கப்படுபவை**

1. அறிவு, ஒழுக்கம், மனவெழுச்சி என்றவகையில் சமநிலை கொண்ட பிரஜைகளை உருவாக்குதல்
2. மனித பெறுமானங்களின் அடிப்படையில் அமைந்த பல்வேறு பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்களை புரிந்துகொண்டு மதிப்பளித்தல்
3. தமது சூழலில் காணும் வேறுபாடுகளை தர்க்கரீதியாக ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளித்து சமூக நல்லிணக்கத்தை வலுவூட்டல்
4. உள்ளக சமாதானம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவித்தல், பகிர்ந்து கொள்ளல்
5. தனியாள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கு இடையில் சுகாதாரம் பற்றிய தொடர்பாடலை மேம்படுத்தல்
6. சமூக - கலாசார மற்றும் சூழல்நேயம் கொண்டவர்களுடன் பங்களிப்புச் செய்து, சவால்களை எதிர்கொண்டு நேர்மறையான முறையில் செயலாற்றல்

# சமயம் மற்றும் ஒழுகலாறு பாடத்தின் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கரு



| சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் பிரதான அடிப்படை எண்ணக்கரு | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கு ஆற்றலுடன் கூடிய நேர்சிந்தனையை போசணைப்படுத்துவது போன்று உடல் உளம் சமூகம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்த ஆளுமை விருத்தியுடைய நபரை உருவாக்குதல். |
| சமூக மற்றும் கலாசார உணர்வுகள் | சமயம் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து மற்றும் ஏனையோரை அறிவுபூர்வமாக, நேயத்துடன் ஏற்றுக்கொள்வதோடு மற்றைய சமூக கலாசாரப் பின்னணி தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற ஆற்றல். |
| சூழல் நேயம் | சூழல் நேயம் வாயிலாக ஒருவருக்கு அவரது சுற்றாடல் தொடர்பான விபரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் தயார்ப்படுத்துவதற்கும் ஏற்ற திறமை தொடர்பாக விளக்கிக் கூறுவார். இது அனைத்து சமயக் கொள்கைகளிலும் காணக்கூடிய பிரதான பண்பாகும். இது தீர்க்கமான ஒரு காரணியாக அமைவது ஒருவருக்கு பல்வேறுபட்ட சூழல் நிலைமைகளுக்கு தம்மை ஏற்புடைமை ஆக்கிக்கொள்வதற்கு இடமளிப்பதாகும். |
| நன்னடத்தை விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சிறப்பான சமூக நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏற்புடைய சமூகம், கலாசாரம் மற்றும் சமயப் பெறுமானங்கள், கொள்கைகள், நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் என்றவாறு வாழ்க்கையை அமைத்துகொள்வதாகும். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | உடல் மற்றும் உள சமநிலையைக் கடைப்பிடித்து மனச்சோர்வற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கான எப்போதும் நல்ல நினைவாற்றலுடன் செயற்படுதல். |

| சமயம் மற்றும் ஒழுகலாறு<br>ஆரம்பக் கல்விக்கான அடிப்படை எண்ணக்கரு விபரங்கள் | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் “சமயம்” எனும் எண்ணக்கருவை அறிந்து தமது சரிதை மற்றும் நடத்தையை சரியாக வடிவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பாடுகளில் ஈடுபடுவர். |
| சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு | தாம் வாழும் பல்வகைமை சார் சமயச் சூழலில் இடம்பெறுகின்ற சமயம் சார்ந்த விழாக்கள், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொடர்பான அனுபவங்களைப் பெற்று கலாசார பல்வகைமை தொடர்பான விளக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவார். |
| சூழல் நேயம் | வாழ்க்கை என்பது சுற்றுச் சூழலுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமையை சமயத்தின் ஊடாகப் புரிந்துகொண்டு, சூழல் நேயத்துடன் செயலாற்றுவார். |
| நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சமயம் சார்ந்து நடைபெறுகின்ற விதிமுறைகள், சட்டதிட்டங்கள், வணக்கமுறைமை மற்றும் பிரயோகிக்கும் விசேட சொல்லாடல் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். சமயம் சார்ந்த தலங்களுக்கு ஏற்றவாறு உடையணிதல், சரியான நடத்தையை மேற்கொள்வதற்கு ஆவன செய்வார். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | அன்றாட செயற்பாடுகளை உறுதியுடன் நினைவாற்றலுடனும் செய்வதற்கு பயிற்சி பெற்று, தமது நடவடிக்கைகளைக் கலக்கமின்றி மகிழ்ச்சியாகச் செய்வார். சிறந்த அன்றாட நடத்தைக் கோலத்தை மேற்கொள்வதற்காக சிறந்த ஆரோக்கிய நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |

| தரம் 1 - சமயம் மற்றும் ஒழுகலாறு பாடச் சட்டகம் | | | |
|---|---|---|---|
| **எண்ணக்கரு** | **கற்றல் பேறு** | **செயலாற்றல் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதி** |
| நடத்தை மேம்பாடு | 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறைகளையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக்கருக்களையும் இனங்காண்பார். | 1.1 சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்துகொண்டு அனுபவம் பெறுவார். | 1.1.1 பங்குபற்றுதல் |
| | | 1.2 சமயநெறி தொடர்பான விசேட சமய வழிபாட்டு வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 விசேட சமய அனுட்டானங்களை இனங்காணல்.<br><br>1.2.2 ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தல். |
| | | 1.3 சமயநெறி தொடர்புபட்ட பிரதான குறியீடுகள் மற்றும் சின்னங்களை இனங்காண்பார். | 1.3.1 குறியீடுகள், சின்னங்களை இனங்காணல். |
| | | 1.4 சமய பாடம் பற்றிய விளக்கம் பெற்று அதனைப் பிரயோகிப்பார். | 1.4.1 சமய பாடநெறி தொடர்பாக விளக்கமாக அறிந்து கொள்ளல்.<br><br>1.4.2 சமய பாடத்தைப் பிரயோகித்தல் |
| | 2. சமய அறிஞர்கள் / சமயத் தோற்றுனர்கள் தொடர்பான வரலாறு /சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பார். | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1. சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | 2.2 சமயம் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு சமய அறிஞர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேடமான பண்புகளைக் கூறுதல். |
| | | 2.3 சமயம் சார்ந்த கதைகளின் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுதல். |
| | | 2.4 விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்களை வி-ளங்கிக்கொண்டு அதனை செவிமடுத்துத் தாளத்-துடன் இசைப்பார். | 2.4.1 விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்களுக்குச் செவிமடுத்தல்<br><br>2.4.2 தாளத்துக் கேற்றவாறு பாடுதல் |
| | | 2.5 விவிலிய உபதேச காவியங்களை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.5.1 முன்மாதிரியைக் கூறுதல் |
| சமூக, கலாசார நல்லிணக்கம் | 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவமான முறையில் நடந்துகொள்வார். | 3.3.1 சமயத்தலங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் குறிப்பார். | 3.1.1 இடங்களை இனங்காணல்.<br><br>3.1.2 இடங்களைப் பெயர் குறித்தல் |
| | | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக் கேற்ப நடந்துகொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கேற்ப நடத்தையை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்<br><br>3.3.2 உடல் அவயவங்களை உரியவாறு பயன்படுத்தல். |
| | 4. சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி அவை தொடர்பான அனுபவங்களைப் பெறுவார். | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் வினைத்திறனுடன் பங்குகொள்வார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றுதல் |
| | | 4.2 விசேட கலாசார நிகழ்வுகளில் செயலூக்கத்துடன் பங்குகொள்வார். | 4.2.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br><br>4.3.2 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>4.3.3. சிறந்த ஆக்கபூர்வமான ஆற்றல்<br><br>4.3.4 உபகரணங்களை உரியவாறு பயன்படுத்தல் |
| கண்ணியம், ஒழுகலாறு மற்றும் இணக்கப்பாடு | 5. புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுரீதியான விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் சீரான முறையில் பின்பற்றுவார். | 5.1 புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுகள், விதிமுறைகள் மற்றும் பழக்கவழ க்கங்களை இனங்காண்பார். | 5.1.1 சரியான பழக்க வழக்கங்களைக் கூறுதல்<br><br>5.1.2 விதிமுறைகளை முறையாகக் கூறுதல். |
| | | 5.2 சரியான விதிமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைவாகச் செயற்படுவார். | 5.2.1 நடவடிக்கை மேற்கொள்ளல் |

| | | | |
|---|---|---|---|
| | 6. சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத்தையும் உடலின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | 6.1 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1. உரியவாறு வழிமுறைகளில் ஈடுபடுதல். |
| | | 6.2 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது விதிமுறைகளை ஏற்றவாறு மேற்கொள்வார். | 6.2.1 முறையான பழக்கவழ க்கங்களை மேற்கொள்ளல். |
| | | 6.3 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான உடலின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிக்காட்டுவார். |
| | | 6.4 சமய நடவடிக் கைகளின்போது உரிய முறையில் பொருத்தமான வார்த்தைகளைப் பிரயோகிப்பார். | 6.4.1 சிறப்பான சொற்பிரயோ கத்தைப் பயன்படுத்துவார். |
| | 7. ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | 7.1 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல் |
| | | 7.2 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களை இனங்காண்பார். | 7.2.1 சரியாக முறையில் நற்பண்புகளை அறிந்து இனங்காணல் |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்றவகையில் தமது நடவடிக்கைகளை கொள்வார். | 7.2.1 செம்மையான நடத்தையை மேற்கொள்ளல். |
| | | | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |

| | | | |
|---|---|---|---|
| சூழல் நேயம் | 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்ப தற்காகச் செயலாற்றுவார். | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br>8.2.2 ஆக்கபூர்வமான திறன்<br>8.2.3 உபகரணப் பயன்பாடு<br>8.2.4 மதிப்பளித்தல் |
| | 9. சமய அறிஞர்கள் மற்றும் ஞானிகள் இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த விதம் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றுவார். | 9.1 கதைகள் / கவிதைகளை அடிப்படையாகக் கெ-ாண்டு இயற்கையின் பெறுமானத்தை இனங்காண்பார். | 9.1.1 அவதானமாகச் செவிமடுத்தல்<br>9.1.2 தெளிவாக விளங்கிக் கொள்ளல்<br>9.1.3 கருத்துக்களை வெளிப்படுத்தல் |
| | | 9.2 சுற்றாடல் வளங்களைச் சிறந்தமுறையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 9.2.1 சிக்கனமான முறையில் பயன்படுத்தல் |
| | | 9.3 உயிரினங்களை அன்பு செய்வார். | 9.3.1 அன்பு செய்தல் |
| | | 9.4 உயிரினங்களுக்கு உணவு வழங்குவார். | 9.4.1 உணவு, பானம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசைக் கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்குமுறையில் கூறுதல் |
| | | 10.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.2.1 சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 11. அன்றாட நடவடிக்கைக ளின்போது அறிவுத்தெளிவுடன் சுயாதீ- னமாகச் செயற்படுவார். | 11.1 நடக்கும்போது அறிவுத்தெளியுடன் சுயாதீனமாக நடப்பார். | 11.1.1 அறிவுத் தெளியுடன் சுயாதீனமாக நடத்தல் |
| | | 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை - வன்மை, ஈரம்- வரட்சி, சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.2.1 மென்மை- வன்மை, ஈரம் - வரட்சி, சூடு - குளிர் ஆகியவற்றை உணர்ந்து அறிந்து கொள்ளல். |
| | | 11.3 எளிமையான முறையில் தியானத்தில் (Meditation) ஈடுபடுவார். | 11.3.1 உடல் உறுப்புக்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல். |
| | | | 11.3.2 அதனை ஏற்றவாறு பிரயோகித்தல் |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

# பாடம் 1 - அற்புதமான படைப்பு

அற்புதமான படைப்பின் வாயிலாக உன்னத இறைவனை அறிமுகம் செய்தலும் பிள்ளைகளிடம் விசுவாசத்தை உருவாக்குதலும் சூழலை மதிப்பதன் ஊடாக நடத்தையை மேம்படுத்தலும் எதிர்பார்க்கப்படுகின்றது“

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள், உருவாக்குனர்கள் தொடர்பான கதைகள் மற்றும் விவிலிய உபதேச காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு உரிய விசேட குணாதிசயங்களை இனங்கண்பார். | தந்தையாகிய இறைவன் | 2.3 சமயக் கதைகள் வாயிலாகப் பெறக்கூடிய முன்மாதிரிகளை வெளிப்படுத்துவார். | 2.3.1 எடுத்துக்காட்டு ஒன்றைக் கூறுவார். |
| | | 2.4 விவிலிய உபதேச காவியங்களைக் கேட்டு தாளத்துக் கமைய பாடுவார். | 2.4.1 தாளத்துக்கமைய பாடுவார். |

**கற்றல் வளங்கள்**

- அழகிய சூழல் அடங்கிய சித்திரம் (மாணவர் செயல் நூல்)
- கிறிஸ்தவ பாடல் புத்தகம் ( பாடல் எண்)
- கடல் நோக்கி - எனும் பாடல்
- பல்வேறு படைப்புக்களை உருவாக்குவதற்கு தேவையான பொருட்கள்
- சித்திரம் நிறந்தீட்டுவதற்கு அவசியமான வர்ணம்
- பறவைகளுக்கான பலகை மற்றும் உணவு

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**படிமுறை 1**

- மாணவர் அனைவரும் செயற்படுகின்ற விதமாக ஒன்றுகூட்டுங்கள்.
- கடல் நோக்கி நதிகள் பாயும் - பாடல் அடங்கிய ஒலிப்பேழை.

**கடல் நோக்கி நதிகள் பாயும்**

**ஒளி நோக்கி மலர்கள் சாயும்**

**அகிலம் படைத்த என் தலைவா**

**என்னை நோக்கி வருவதேன்**

**குருவிகள் பறந்திடும் நேரத்திலே**

**ஏணி தேவையில்லை**

**நீரில் மீனினம் நீந்திடவே**

**படகு தேடி செல்வதில்லை**

**ஞாலம் தாங்கும் எந்தன் இறைவா**

**என்னை நாடுவதேன்**

- பாடலை செவிமடுப்பதற்கு இடமளியுங்கள். மாணவர்களுடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.
- பாடலைப் பாடியவாறு மாணவர்களுடன் நடிப்பில் ஈடுபடுங்கள்.
- பாடலைப்பற்றிய கருத்தை மாணவரிடம் வினவுங்கள். இவை அனைத்தையும் படைத்தவர் இறைவனே என்பதைக் கூறுங்கள்.
- இறைவன் படைத்த உலகின் அழகை இரசிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலே வானத்தைப் பார்ப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- கீழே பூமியை அவதானமாகப் பார்த்து அதில் காணும் அழகை இரசிப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- மாணவர்கள் கண்களை மூடியவாறு சூழலில் கேட்கும் பல்வகையான ஒலிகளை இரசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வீசுகின்ற காற்றின் மென்மையை அனுபவிப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- மரம், செடிகொடிகள், சூரியன், நிலா அனைத்தையும் படைத்தவர் இறைவன் என்பதை மாணவர்களுக்குத் தெளிவு படுத்திக் கூறுங்கள்.
- மாணவர்களின் அனுபவங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- முன்னர் அறிவித்தவாறு இறைவனின் படைப்புக்கு இசைவாக பாத்திரமேற்றுத் தமது நடிப்பை அனைவர் முன்பும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள படைப்புகளை அவதானித்து அவற்றைப் போல முன்வைப்பதற்கு மாணவரைத் தயார் செய்யுங்கள்.




**நான் ஒரு மலர், என்னைப் படைத்தவர் இறைவன், நான் வாசம் வீசும் மலர்**



**நான் ஒரு திராட்சைக் குலை, என்னைப் படைத்தவர் இறைவன், நான் மிகவும் சுவையான பழம்**



**நான் ஒரு மீன், என்னைப் படைத்தவர் இறைவன், என்னால் நீந்த முடியும்**



**நான் ஒரு முயல், என்னைப் படைத்தவர் இறைவன், என்னால் பாய்ந்து செல்ல முடியும்**

- இந்த நடிப்பை முன்வைத்த பின் மாணவர்களை கணிப்பீட்டுக்கு உட்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

  இந்த அழகான படைப்பை சரியான முறையில் பாதுகாப்பது எப்படி? விடை கூறும் மாணவர்களைப் பாராட்டுங்கள்.

**படிமுறை 02**

- இறைவன் எமக்குக் கொடுத்துள்ள அழகிய படைப்புக்கள் நிறைந்த இந்த உலகைப் பாதுகாப்பதற்கு மாணவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் கருத்தைப் பாராட்டுங்கள்.
- மாணவர்கள் செய்யக்கூடியவற்றை நடிப்பின் வாயிலாக முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.

  உதா: நான் ஆகாயத்தின் அழகைப் பார்க்கிறேன் - நான் மலரைப் பறித்து வீசி எறிய மாட்டேன்.

  நான் செல்லப் பிராணிகளை அன்புடன் பார்த்துக்கொள்வேன்.

- மாணவர் செயற்பாடுகளைப் பாராட்டுங்கள்.
- மாணவரை அமைதிப்படுத்தி செபம் செய்வதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- எழுந்து நின்று சரியான முறையில் கைகளைக் கூப்பியவாறு பின்வரும் செபத்தை மாணவருடன் சேர்ந்து சொல்லுங்கள்.

  அன்பின் இறைவா, நீர் படைத்துள்ள இந்த அழகிய உலகிற்காக உமக்கு நன்றி.

- பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவருடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.

படிமுறை 3

- செயற்பாடு 3 இன் கீழ் உள்ள மரத்தில் மலர்கள், இலை, காய்கள் என்பவற்றை வரைவதற்கு உதவுங்கள், அதில் உள்ள பந்தியை மாணவருடன் இணைந்து உரத்து வாசியுங்கள்.
- பெற்றோருக்கு அறிவுறுத்தல் வழங்கிப் பறவைகளுக்கான பலகையொன்றைத் தயார் செய்வதற்கு ஆவன செய்யுங்கள்.
- கொண்டுவந்த உணவை பறவைகளுக்கான பலகையில் வைத்து அதனை அவதானிக்கச் செய்யுங்கள். மாணவருடன் இணைந்து பின்வரும் பாடலை இரசனையுடன் பாடுங்கள்.

**சின்ன சிட்டுக் குருவியே**

**சின்னச் சிட்டுக் குருவியே**

**உன்னை அழகாகப் படைத்தது யாரு?**

**அங்குமிங்கும் பறந்து கொண்டு**

**ஆனந்தமாய் பாடும் உன்னை**

**அனுதினமும் காப்பது யாரு?**

**ஐயோ ஐயோ இது தெரியாதா?**

**அந்த இறைவன் தானே**

**என்னைக் காக்கின்றார்**

**உண்ண உணவும் கொடுக்கிறார்**

**உறங்க இடமும் கொடுக்கிறார்**

**இந்த உலகத்தையே படைத்து இருக்கிறார்**

மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை

- படங்களை நன்கு அவதானிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். அது தொடர்பாக எழுகின்ற கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இப்பாடலைப் பாடச் செய்யுங்கள். அதன் பின்னர் நடிப்பில் ஈடுபடுத்துங்கள்.
- வரைவதற்கென தரப்பட்டுள்ள உருவத்தை முதலில் பூர்த்தி செய்யுங்கள்.
- இரண்டாவதாக மிருகங்களுக்கு நிறந்தீட்டிய பின்னர் மீதமாக உள்ள உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.
- உருவங்களை நிறந்தீட்டச் செய்யுங்கள். மாணவர் விரும்பிய ஒரு சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்து அதனை நடித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.
- இந்த மரம் அடங்கிய உருவத்தைப் பூர்த்தி செய்ய வழிகாட்டுங்கள். பறவைகளுக்கான பலகை தொடர்பாக மாணவரை அறிவுறுத்துங்கள். தரப்பட்டுள்ள பந்தியை மாணவருடன் சேர்ந்து வாசியுங்கள்.
- மாணவருக்கு கேட்கும் விதமாக திருவிவிலியம் தொ.நூ.1: 1-31 வரை வாசியுங்கள்.

படிமுறை 3

- கடவுள் இவைகள் அனைத்தையும் ஆறு நாட்களில் படைத்தார். கடவுளின் படைப்புக்கள் அழகானவை. இவ்வாறு திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதில் மாணவரின் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- கூறிய கதையிலிருந்து வாய்மொழி வினாக்கள் சில கேளுங்கள்.

படிமுறை 4

- கடவுள் படைத்த உலகம் குறித்த பாடலைப் பாடுங்கள்.
- கடவுள் படைத்த உலகத்துக்கும் அதிலிருந்து கிடைக்கும் பயன்களுக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயக் கதைகள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட முன்மாதிரி பற்றிக் கூறுவார். | 2.1.1 | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப்ப தற்கான மாதிரி ஒன்றைக் கூறுவார். | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப்ப தற்கான மாதிரி ஒன்றை உதவியுடன் கூறுவார். | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப் பதற்கான மாதிரி ஒன்றைக் கூறாதிருப்பார். | சமயக் கதைகள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட முன்மாதிரி பற்றிக் கூறுவார். |
| 2.3 விவிலிய காவியங்க ளுக்குச் செவிமடுத்து தாளத்துடன் பாடுவார். . | 2.3.1 | அழகிய படைப்பைக் கவனத்திற் கொண்டு தாளத்துடன் பாடுவார். | அழகிய படைப்பைக் கவனத்திற் கொண்டு தாளத்துடன் உதவியோடு பாடுவார். | அழகிய படைப்பைக் கருத்திற் கொண்டு தாளத்துடன் பாட இடர்ப்படுவார். | விவிலிய காவியங்களைச் செவிமடுத்து தாளத்துடன் பாடுவார். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

# பாடம் 2 - எமது ஆதி பெற்றோர்

இறை தந்தை தமது அன்பின் காரணமாக எமது ஆதிப் பெற்றோரை உருவாக்கி அவர்களை ஏதேன் தோட்டத்தில் இருக்கச் செய்தார். ஆதாம், ஏவாள் இறை தந்தைக்குக் கீழ்ப்படியாமை மற்றும் காயின், ஆபேல் கதையை விளக்குவதன் வாயிலாக இறைதந்தையை அன்பு செய்தல் வலியுறுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. மறை அறிஞர்கள், மறைத் தோற்றுனர்கள் தொடர்பான கதைகள், சமயக் கதைகள் மற்றும் விவிலிய காவியத்தின் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு உரிய சிறப்பான குணாதிசயங்களை இனங்காண்பார். | உன்னத இறைதந்தை | 2.2 சமயக் கதைகள் அடிப்படையில் சமய அறிஞர்களின் விசேட குணாதிசயங்களைக் கூறுவார். | 2.2.1 விசேட குணாதிசயங்களைக் கூறுவார். |
| | | 2.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயக் கதைகளைச் செவிமடுப்பார். |

**கற்றல் வளங்கள்:**

- படைப்பின் வரலாறு அடங்கிய காணொளி
- புனித விவிலியம் தொடக்க நூல்1: 27-28 மற்றும் தொடக்க நூல்2: 8-9
- துண்டுகளாக்கப்பட்ட பல்வேறு நிறக்கடதாசி, பசை
- மாணவர் செயல்நூல் செயற்பாடு 3 அடங்கிய சுவரொட்டி
- செபம் அடங்கிய சுவரொட்டி

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படிமுறை 1**

- பதிவிறக்கம் செய்யப்பட்ட காணொளியை மாணவர் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஆதாம், ஏவாள், ஏதேன் தோட்டம், காயின், ஆபேல் தொடர்பாக உரையாடுங்கள்.
- காணொளி ஊடாகப் பார்த்த ஆதிப் பெற்றோர் தொடர்பாக மாணவர் கருத்தைக் கேட்டறியுங்கள்.
- எமது ஆதிப்பெற்றோர் ஆதாம், ஏவாள் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

- இறை தந்தையின் அன்பு காரணமாக உருவாக்கப்பட்ட ஆதிப் பெற்றோர் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த மகிழ்வான வாழ்க்கையை எடுத்துக் காட்டி, அவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் போன விதம் பற்றி விபரித்துக் கூறுங்கள்.
- ஆதிப் பெற்றோரின் பிள்ளைகளான காயின், ஆபேல் தொடர்பான விபரங்களை மாணவருக்கு முன்வையுங்கள்.
- அனைத்து மாணவர்களையும் செப வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- செபம் அடங்கிய சுவரொட்டியை மாணவருக்கு முன்வையுங்கள்.
- மாணவருடன் இணைந்து பின்வரும் செப வழிபாட்டில் ஈடுபடுங்கள்.

**அன்பின் இறைவா, ஆதிப் பெற்றோர் வாயிலாக உமது அன்பை எமக்கு வெளிப்படுத்தியமைக்காக மிகவும் நன்றி கூறுகின்றோம். இந்த அழகிய படைப்பினைப் பாதுகாப்பதற்கான வரத்தை எமக்கு அருளுமாறு வேண்டுகிறோம்.**

படிமுறை 2

- புனித விவிலியத்தில் தொடக்க நூல்1: 27-28 மற்றும் தொடக்க நூல்2: 8-9 பகுதிகளை வாசித்து மாணவருக்கு விளக்குங்கள்.
- இறைதந்தை ஏதேன் தோட்டத்தில் எமது ஆதிப்பெற்றோருக்கு தேவையான அனைத்தையும் வழங்கினார் என்பதையும் அவர்கள் அங்கு மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள் என்பதையும் மாணவருக்கு தெளிவுபடுத்திக் கூறுங்கள்.
- ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்கு இறை தந்தையின் பூரணமான பாதுகாப்பும் ஆசீர்வாதமும் கிடைத்தது என்பதை மாணவருக்கு விளக்கிக் கூறுங்கள்.
- மாணவர் செயல்நூலில் உரிய பாடத்தில் முதல் பக்கத்தில் உள்ள பகுதியை மாணவர்களுக்கு விளக்கி, அதனை உரத்து வாசியுங்கள்.

படிமுறை 3

- கீழேயுள்ள படத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- சேகரித்த கடதாசிகளைக் கொண்டு இந்த சித்திரத்தை பூர்த்தி செய்க.
- ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் மகிழ்வாக இருக்கும் படத்தை நிறந்தீட்டுங்கள்.





**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகள் வாயிலாக மறை அறிஞர் களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக படைக்கப் பட்டவற்றை கூறி அவற்றுக்கு நிறந்தீட்டுவார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறை அன்பு காரணமாக படைக்கப்பட்ட ஒன்றைக் கூறி அதற்கு நிறந்தீட்டுவார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக படைக்கப்பட்ட ஒன்றை உதவியோடு கூறி அதற்கு நிறந்தீட்டுவார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக உருவாக்க-ப்பட்ட எதையும் கூற மாட்டார், நிறந்தீட்ட இடர்படுவார். |
| 2.1 சமயம் சார் கதைகளை விருப்புடன் செவிம டுப்பார். | 2.1.1 | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்களையும் கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகளில் ஒருவர் பெயரைக் கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்களையும் உதவியோடு கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்களையும் கூற இடர்படுவார். |

## எண்ணக்கரு - சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு
## பாடம் 3 - தேவாலயம் செல்வோம்

நாம் தேவாலயத்திற்குச் செல்வதற்கு முன் அவசியமானவற்றைத் தயார் செய்துகொண்டு, பணிவுடன் தேவாலயத்திற்கு சென்று அதன் புனித தன்மையை பேணும் விதமாக வழிபாடுகளில் முறையாகப் பங்குபற்றி இறைதந்தைக்கு எமது அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 3. புனித வணக்கத் தலங்களை இனங்கண்டு, அவ்விடங்களில் கண்ணியமாக நடந்து கொள்வார். | கத்தோலிக்க தேவாலயம் | 3.1 தமது சமயத் தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | 3.1.1 தலங்களை இனங்காணல். |
| | | 3.2 சமய தலங்களில் அவரவர் சமய விதிமுறைகளை அனுசரித்து நடப்பார். | 3.2.1 உடல் உறுப்புக்களை சரியான நிலையில் பயன்படுத்தல். |

**கற்பித்தல் வளங்கள் :**

- தேவாலயம் அடங்கிய படம்
- பாடல் புத்தகம்
- செபமாலை
- வர்ணம்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**தேவாலயம் செல்வதற்கான முன்னாயத்தம்**

**(தேவாலயம் செல்வதற்கான சந்தர்ப்பம் இல்லையெனில் தேவாலயம் உள்ள படத்தைக் காட்டுங்கள். அதன் பின்னர் சுதந்திரமான இடத்திற்குச் சென்று மாணவரைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.)**

- அதிபருடன் கலந்துரையாடி தேவாலயம் செல்வதற்கான பயணத்தை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.
- தேவாலயத்திற்கு மாணவரை அழைத்துச் செல்வது தொடர்பாக ஆலய பங்குத் தந்தைக்கு அறிவித்து அவரது அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பிள்ளைகளை தேவாலயத்திற்கு அழைத்துச் செல்வது தொடர்பாக பெற்றோரையும் அறிவுறுத்துங்கள்.
- தேவாலயத்திற்கு செல்வதற்கு முதல் நாள் தேவாலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறை (அமைதி பேணல்) பற்றி அறிவுறுத்துங்கள்.
- உரியமுறையில் தேவாலயத்திற்கு செல்லுங்கள்.

தேவாலயத்திற்குச் சென்ற பின்னர்

படிமுறை 1

- தேவாலயத்திற்கு உள்ளே செல்லும் முன்னர் செபமாலை, பாடல் புத்தகம் என்பவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை ஆசிரியர் தாம் வைத்திருக்கும் செபமாலை, பாடல் புத்தகம் என்பவற்றின் மூலம் விளக்கம் அளியுங்கள்.
- மாணவர்களை வரிசைப்படுத்தி கைகளைக் கூப்பியவாறு செல்லுவதற்கு அறிவுறுத்துங்கள்.
- தேவாலயத்திற்கு உட்செல்லும் போது, மிகவும் அமைதியாகவும் பக்தியுடனும் செல்ல வேண்டும் என்பதை தெளிவுபடுத்துங்கள்.

படிமுறை 2

- தேவாலயம் என்பது இறைதந்தை வீற்றிருக்கும் புனித தலம் என்பதைக் கூறுங்கள்.
- அதனால் நாம் தேவாலயத்துள் நண்பர்களுடன் பேசுவதை விட்டு, அமைதியாக இருக்க வேண்டும் எனவும் தேவாலயத்தின் உள்ளே இருக்கையில் நாம் இறைதந்தையுடன் மட்டுமே உரையாட வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே இருக்கும் விசேட இடம் திருப்பலி பீடம் என்பதைக் கூறுங்கள்.
- குருவானவர் பீடத்தில் தான் திருப்பலி நிறைவேற்றுவார் என்பதை தெளிவுபடுத்துங்கள்.
- பீடத்தில் சிவப்பு விளக்கு ஏற்றப்பட்டு திவ்விய நற்கருணைநாதர் தாபிக்கப்பட்டுள்ள விசேட இடமே மிக மரியாதைக்குரிய இடமாகும் என்பதை மாணவர்களுக்குக் கூறுங்கள்.

படிமுறை 3

- இப்போது நாம் தேவாலயத்தில் உள்ள எல்லாம் வல்ல இறைதந்தையை வணங்குவோம். முதலில் கைகளைக் கூப்பி வணங்குமாறு அறிவுறுத்துங்கள்.
- வலது முழங்காலை தரையில் வைத்து தலை குனிந்து பணிவுடன் வணங்கும் முறையை ஆசிரியர் மாதிரியாகச் செய்து காட்டுங்கள்.
- பின்னர் மாணவர்களுடன் இணைந்து வணங்கிய பின் படிப்படியாக மாணவர்களையும் அவ்வாறு இறைவனை வணங்குவதற்குப் பயிற்சி அளியுங்கள்.

படிமுறை 4

- மாணவர்களை சிலுவையின் பாதப்படிக்கு அழைத்துச் செல்லுங்கள். முழந்தாட்படியிட்டு கைகளை கூப்பி வணங்குமாறு கூறுங்கள்.
- “நீர் எந்தன் பாறை என் அரணான யேசுவே” எனும் பாடலை மாணவர்களுடன் இணைந்து பக்தியோடு பாடுங்கள். மாணவர்களை எழும்புமாறு கூறுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே இருக்கும் வாங்குகளில் அமைதியாக இடைவெளி விட்டு அமரச் செய்யுங்கள்.
- அமைதியாக இருந்து இறைத்தந்தையுடன் சிறிதுநேரம் மௌனமாக உரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் முன்வைக்க வேண்டிய மன்றாட்டு, நன்றுகூறல் என்பவற்றை நினைவூட்டுங்கள்.

படிமுறை 5

- மாணவர்களை தேவாலயத்திற்கு வெளியே அமைதியாக அழைத்துச் செல்லுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே அவர்கள் பார்த்தவற்றைப் பற்றி உரையாடுங்கள்.

- தேவாலயத்தை விட்டு வெளியேறும் முன்னர் தாம் அமர்வதற்குப் பயன்படுத்திய வாங்குகளை மீண்டும் ஒழுங்காக வைக்கவும் தேவாலய தரையைச் சுத்தம் செய்யவும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தாம் எடுத்து வந்த பொருட்களை மீண்டும் எடுத்துச் செல்லவும் அறிவுறுத்துங்கள்.

**தேவாலயம் சென்று திரும்பிய பின்னர்**

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- எமது தேவாலயத்தின் படத்தை அழகாக நிறந்தீட்டுங்கள்.
- தேவாலயம் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை இணையுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே மிக விசேட இடமாக இனங்கண்ட பலி பீடத்தின் படம் ஒன்றைக் காட்டி அதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.
- தேவாலயத்திற்குச் சென்று மரியாதையுடன நடந்துகொண்ட விதம் பற்றி மீண்டும் நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்களுடன் இணைந்து “நீர் எந்தன் பாறை என் அரணான இயேசுவே” எனும் பாடலைப் பாடுங்கள்.
- மாணவர் செயல்நூலில் அடங்கியுள்ள படத்தைப் பார்த்து ஞாயிறு தேவாலயத்திற்குச் செல்லும் பாதையைச் சரியாக நிறந்தீட்டுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை |
|---|---|---|---|---|
| | | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 3.1 தமது சமய தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | 3.1.1 | தேவாலயத்திறகுக் கண்ணியமாகச் சென்று சமயத் தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | தேவாலயத்திறகுக் கண்ணியமாகச் சென்று சமயத் தலங்களை இனங்கண்டு உதவியோடு பெயர் கூறுவார். | தனது சமயத் தலங்களை இனங்காண இடர்படுவார். |
| 3.2 சமயத் தலங்களில் சமய முறைப்படி நடந்துகொள்வார். | 3.2.1 | சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்துவார். | ஒருவரது உதவியுடன் சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்-துவார். | சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்த இடர்படுவார். |

## எண்ணக்கரு - சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு
## பாடம் 4 - திருச் சிலுவை

கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்து திருச்சிலுவைக்கு மரியாதை செலுத்தலும் கிறிஸ்தவ கலாசாரத்தின் குறியீடாக விளங்கும் திருச்சிலுவையை அர்த்தமுள்ளவகையில் அணிந்து கொள்ளலும் கலாசார விழாக்களில் கௌரவமான முறையில் கலந்துகொள்ளலும் இதன் வாயிலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 4. சமய மற்றும் கலாசார விழாக்களில் கலந்துகொண்ட அனுபவம் பெறுவார். | குறியீடு | 4.1 விசேட சமய விழாவில் வினைத்திறனுடன் பங்கேற்பார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றல். |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாக செய்துகாட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல். |

**கற்றல் வளங்கள் :**

- திருச்சிலுவை /திருச்சிலுவையின் படம்
- சிறிய சிலுவையொன்று, திருச்சிலுவை அணிவதற்கு அவசியமான நாடா
- பாடல் அடங்கிய சுவரொட்டி
- கிறிஸ்துவின் கல்வாரிப் பயணம் அடங்கிய காணொளி
- பாடல் அடங்கிய ஒலிப்பேழை
- வர்ணம் /காய்ந்த இலைச் சருகு / பசை
- சிறிதாக துண்டாக்கப்பட்ட கடதாசி

**இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்**

**திரும்பிப் பார்க்க மாட்டேன் திரும்பிப் பார்க்க மாட்டேன்**

**சிலுவையே முன்னால் உலகமே பின்னால்**

**சிலுவையே முன்னால் உலகமே பின்னால்**

**இயேசு சிந்திய குருதியினாலே**

**விடுதலை அடைந்தேனே விடுதலை அடைந்தேனே**

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**படிமுறை 1**

- திருச் சிலுவை உருவம் / திருச்சிலுவையின் படம் என்பவற்றை மாணவர் முன்பாக மரியாதையோடு காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்தப்பட்ட உருவம் என்னவென்பதற்கான விடையை மாணவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.
- கிறிஸ்துவின் திருச்சிலுவை தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கம் அளியுங்கள்.
- கிறிஸ்தவர்களாகிய எமக்கு திருச்சிலுவை உன்னதமான இலச்சினை என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- கிறிஸ்தவர்களாகிய எமக்கு மீட்பை அருளிய திருச்சிலுவைக்கு மரியாதை செலுத்த வேண்டிய விதம் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- “இயேசுவின் பின்னால்” எனும் பாடல் அடங்கிய சுவரொட்டியைக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்பாடல் வரிகள் மற்றும் அதன் பொருள் பற்றி விளக்கிக் கூறுங்கள்.
- பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கைகளைக் கூப்பி மிகவும் பக்தியுடனும் பணிவுடனும் மாணவர்களுடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.

**படிமுறை 2**

- மாணவர்களை மாணவர் செயல்நூலில் உள்ள படங்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- சித்திரம் தொடர்பான கருத்துக்களை மேலோங்கச் செய்யுங்கள்.
- மாணவர் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- அதில் அடங்கியுள்ள விடயங்களை ஒவ்வொரு வசனமாக மாணவருடன் சேர்ந்து உரத்து வாசியுங்கள்.
- மீட்பராம் கிறிஸ்து மரணத்தை வென்று எமக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தமைக்கான அடையாளம் திருச்சிலுவை என்பதை மாணவர்களிடம் உறுதிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- நற்கிரியைகள் /நல்ல செயல்கள் எவை என்பதை மாணவர்களிடம் வினவுங்கள்.
- அன்றாடம் மாணவர் செய்கின்ற நற்செயல்ளைக் கேட்டறிந்து கரும்பலகையில் குறித்துக்கொள்ளுங்கள்.

  உதா: நான் அம்மாவுக்கு உதவி செய்தேன்.

  நான் ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து நடந்தேன்.

  நான் வீட்டைச் சுத்தம் செய்தேன்.

  நான் கோப்பையைக் கழுவினேன்.

- மாணவர் பதில்களைப் பாராட்டுங்கள்.
- முடிந்தவரையில் காய்ந்த இலைச் சருகுகளைக் கொண்டு சிலுவையை நிர்மாணிக்கச் செய்யுங்கள்.

- நீங்கள் நற்செயல் ஒன்றைச் செய்த பின்னர் நிர்மாணித்த சிலுவையை மாணவர் ஆக்கங்களுக்கான பலகையில் ஒட்டுங்கள். இங்கு பல்வேறு விதமாக மாணவர் ஆக்கபூர்வமான நிர்மாணங்களைக் கட்டியெழுப்பும் வண்ணம் சிலுவைகளை ஒட்டுவதற்கு அறிவுறுத்துங்கள்.

படிமுறை 4

- எடுத்து வந்த சிறிய திருச்சிலுவை மற்றும் நாடாவை ஆசிரியர் மேசையில் வைக்குமாறு கூறுங்கள். (ஏனையோருடனும் பகிர்ந்து கொளளக்கூடியவாறு மேலதிகமாக சிலுவை மற்றும் நாடாவை எடுத்துவரும்படி மாணவரை அறிவுறுத்துங்கள்.)
- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் திருச்சிலுவை மற்றும் நாடாவைப் பகிர்ந்து அளியுங்கள்.
- சிலுவையை நாடாவில் இணைத்து தமது கழுத்தில் அணிந்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். மாணவர்களுக்கு ஆசிரியர் உதவி வழங்குங்கள்)
- திருச் சிலுவையை கழுத்தில் அணிந்ததும் தாம் தேவ ஆசீர்வாதம் பெற்று பலம் பெறுகின்றோம் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- எமது கிறிஸ்தவ தன்மையின் அடையாளமாக விளங்கும் திருச்சிலுவைக்கு நாம் அன்புடன் மதிப்பளிக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.
- ஒரு சாதாரண ஆபரணம் போல அல்லாமல், மிகுந்த கௌரவத்துடன் திருச் சிலுவையைக் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கிக் கூறுங்கள்

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள திருச்சிலுவையில் அறைப்பட்ட இயேசுவின் உருவத்தைப் பார்த்து மாணவர் கருத்துக்களை வினவுங்கள்.
- இயேசுவின் கல்வாரிப் பயணம் அடங்கிய காணொளியை அவதானிக்கச் செய்யுங்கள்.
- திருச் சிலுவை கிறிஸ்தவர்களது வெற்றியின் சின்னம் என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- திருச்சிலுவை அடையாளத்தை ஒட்டு (கொலோஜ்) முறையால் பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு வழிகாட்டுங்கள்.
- செயல்நூலில் உள்ள சித்திரத்தை அழகாக நிறந்தீட்டச் செய்யுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை |
|---|---|---|---|---|
| | | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 4.1 சமய புனித தலங்களில் சமய முறைப்படி நடந்து கொள்வர். | 4.1.1 | கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிப்பார். | கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு வழிகாட்டலின் பின்னர் கௌரவம் அளிப்பார். | கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிக்க இடர்படுவார். |
| 4.3 பொருத்தமான ஆடைகளை அணிந்து முறையாகப் பேசுவர். | 4.3.1 | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்து காட்டிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்து காட்டி உதவியுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்து காட்டுகின்ற செயற்பாடுகளில் இடர்படுவார். |

## எண்ணக்கரு - ஒழுக்கலாறு விழுமியம் மற்றும் புரிந்துணர்வு
## பாடம் - 5 திருச்சிலுவை வரைவோம்

கிறிஸ்தவ வழிபாட்டு முறைமை மற்றும் ஒழுங்குமுறைகளை அனுசரித்து இச் செபவழிபாட்டை அறிமுகம் செய்தலும் திருச்சிலுவை அடையாளமிடுதலும் புனித தலங்களில் சரியான நிலைப்பாட்டை வெளிக்காட்டலும் இதன் வாயிலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 5. புனித தலங்களில் சரியான ஒழுங்கு விதிகள் மற்றும் நற்பழக்க வழக்கங்களை அனுசரித்து நடப்பார். | வழிபாடு செய்தல் மற்றும் ஒழுங்குமுறைகள் | 5.2 சரியான ஒழுங்கு முறை மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைய செயலாற்றுவார். | 5.2.1 சீரான நிலை |
| 6. சமய வழிபாடு செயற்பாடுகளில் ஈடுபடும்போது, சரியான ஒழுங்குமுறை, பழக்கவழக்கம் மற்றும் உடல் உறுப்புகளின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார். | | 6.3 சமயம் வழிபாடு செயற்பாடுகளில் ஈடுபடும் போது உறுப்புகளின் சரியான நிலையை வெளிக்காட்டுவார். | 6.3.1 பொருத்தமான செல்லாடல் |

**கற்பித்தல் வளங்கள் :**

- திருச் சிலுவையின் உருவம்
- வர்ணக் கடதாசி, பசை
- நிறப் பென்சில்

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு:**

**படிமுறை 1**

- அமைதியான சூழலுக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- செப வழிபாடு அடங்கிய படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- படத்தைப் பார்த்து மாணவர் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- கிறிஸ்துவின் திருச்சிலுவை கிறிஸ்தவர்களாகிய எமது உன்னத அடையாளம் என்பதை மீண்டும் வலியுறுத்துங்கள்.
- “திருச்சிலுவை செபத்தில்” ஈடுபடும் சந்தர்ப்பத்தில் இத்திருச்சிலுவை அடையாளத்தை எமது உடலில் வரைந்துகொள்வது தொடர்பாகக் கூறுங்கள்.
- திருச்சிலுவை செபம் மிகவும் வல்லமை வாய்ந்த செபம் என்பதைக் கூறுங்கள்.

படிமுறை 2

- மாணவரை எழும்பச் செய்து அவர்களை அமைதிப்படுத்தி வகுப்பறைச் சூழலை செபவழிபாட்டுக்கு ஏற்றவிதமாக தயார் செய்து கொள்ளுங்கள்.
- அனைத்து மாணவர்களையும் கைகளைக் கூப்பியவாறு இருக்கும் படி செய்யுங்கள்.
- ஆசிரியர் கீழேயுள்ள அறிவுறுத்தல்களை மாணவரிடம் கூறுங்கள். எடுத்துக்காட்டுடன் செய்து காட்டுங்கள்.
- வலது கையை முன்னெடுத்து பெருவிரலை நேராகவும் ஏனைய விரல்களை மடக்கியும் வைத்திருங்கள்.

1. முதலாவதாகப் பெருவிரலால் நெற்றியில் சிலுவை அடையாளமிடுங்கள்.

    “திருச்சிலுவை அடையாளத்தினாலே” எனக் கூறுங்கள்.

2. உதடுகளில் சிலுவை அடையாளமிடுங்கள்.

    “எங்கள் எதிரிகளிடமிருந்து எங்களை விடுவித்தருளும்” எனக் கூறுங்கள்.

3. மார்பில் சிலுவை அடையாளமிடுங்கள்.

    “எங்கள் இறைவா” எனக் கூறுங்கள்.

4. நெற்றி, மார்பு, இடது, வலது தோள்களில் முறையே அடையாளமிடுக.

    “தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே” எனக் கூறுங்கள்.

5. இருகைகளைக் குவித்து தலை குனிந்து வணங்கி “ஆமென்” என்று கூறுங்கள்.

- இவ்வாறு சரியான நிலைப்பாட்டில் இருந்து “திருச்சிலுவை செபத்தை” ஆசிரியர் மாணவருடன் இணைந்து பலதடவை கூறுங்கள்.
- எமது கிறிஸ்தவ வாழ்வின் அடையாளமாக இருக்கின்ற சிலுவைக்கு நாம் அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துங்கள்.

படிமுறை 3

- முன்னர் கூறிய திருச்சிலுவை செபத்தை மீண்டும் பக்தியுடன் கூறச் செய்யுங்கள்.
- சரியாக இச்செபத்தைக் கூறுகின்ற மாணவரை முன்னால் அழையுங்கள். அதன் பின்னர் மீண்டும் அவர்களை சரியான கை அசைவுகளைப் பயன்படுத்திக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- கைகளைத் தட்டி மாணவரைப் பாராட்டுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- திருச்சிலுவைக் குறியீட்டைச் சரியான முறையில் பக்தியுடன் அடையாளமிடுங்கள். அதன் பின்னர் சித்திரத்தை நிறந்தீட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- சரியான முறையில் திருச்சிலுவை அடையாளமிடுகின்ற ஒழுங்குமுறைக்கேற்ப பொருத்தமான இலக்கத்தை இணைக்கச் செய்யுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை |
|---|---|---|---|---|
| | | **நிலை 3** | **நிலை 2** | **நிலை 1** |
| 5.2 விசேட சமய விழாக்களில் வினைத்திறனுடன் பங்குபற்றுவார். | 5.2.1 | கலாசாரப் புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிப்பார். | கலாசாரப் புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிப்பார். | கலாசாரப் புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிக்க இடர்படுவார். |
| 6.3 தமது அயல் சுற்றாடலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப் பதில் பங்களிப்பு செய்வார். | 6.3.1 | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்து காட்டிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | விசேட சமய அல்லது கலாசர விழா ஒன்றை மாதிரியாகச் செய்து செயற்பாடுகளில் ஈடுபடுவார். | விசேட சமய அல்லது கலாசர விழா ஒன்றை மாதிரியாகச் செய்ய இயலாததோடு செயற்பாடுகளில் ஈடுபடவும் இடரபடுவார். |

# எண்ணக்கரு - ஒழுக்கலாறு விழுமியம் மற்றும் புரிந்துணர்வு

# பாடம் - 06 பலத்துடன் நடப்போம்

| |
|---|
| மனதை ஒருநிலைப்படுத்தி பலத்தோடு நடப்பதற்கு பயிற்சியளிப்பதன் வாயிலாக அன்றாட நடவடிக்கைகளை இயேசுவோடு இணைந்து சரியான முறையில் செய்வதற்கான வழிகாட்டலை வழங்குவது இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| அன்றாட செயற்பாடுகளின் போது போதிய நினைவாற்றலுடன் செயற்படுவார். | அன்றாட நன்னடத்தை மற்றும் உறுதிப்பாடு | 11.1 நடந்து செல்கையில் போதிய நினைவாற்றலுடன் நடப்பார். | 11.1.1 நினைவாற்ற லுடன் நடந்து செல்லல். |
| | | 11.2 நடையின் போது வன்மை - மென்மை, ஈரம் - வரட்சி, வெப்பம் - குளிர் என்பவற்றை பாதத்தில் உணர்ந்தவாறு நடையில் ஈடுபடுவார். | 11.2.1 வன்மை - மென்மை, ஈரம் - வரட்சி, வெப்பம் - குளிர் என்பவற்றை இனங்காணல். |

**கற்பித்தல் வளங்கள் :**

**கற்றல் வளங்கள்:**

- "இயேசு நேசிக்கிறாரா" எனும் பாடல் அடங்கிய ஒலிப்பேழை
- சித்திரம் நிறந்தீட்டுவதற்கு தேவையான வர்ணங்கள்
- கிறிஸ்துவின் உருவம் கொண்ட படம்
- இயற்கை மலர்கள், மலர்க் கூடை

**கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு:**

**படிமுறை 1**

- வெளியான ஒரு இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர் இடையே இடைவெளி இருக்குமாறு நிற்கச் செய்யுங்கள்.
- மனதை ஒருநிலைப்படுத்திப் பாடலைக் கேளுங்கள். பின்னர் "இயேசு நேசிக்கிறார் இயேசு நேசிக்கிறார்" பாடலைச் செவிமடுத்து மாணவரைப் பாடச் செய்யுங்கள்.

“இயேசு நேசிக்கிறார் இயேசு

நேசிக்கிறார்

நீசனான என்னையும் அதிகமாய்

இயேசு நேசிக்கிறார்”

- சிறிய தியானம் ஒன்றின் வாயிலாக மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு மாணவரிடம் இவ்வினாக்களை வினவுங்கள்.
- அனைத்து மாணவரிடமும் இவ்வாறு வினவுங்கள்:
    - நீங்கள் பாடிய பாடல் என்ன? அதன் கருத்து என்ன?
    - உங்களை இயேசு நேசிக்கிறார் என்பதை எப்படி உணர்வீர்கள்?
- மேலும் இதுபோன்ற வினாக்களை முன்வைத்து மாணவர்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.
- இவ்வினாக்களின் ஊடாக மாணவர் கவனத்தை உங்கள் பால் திருப்புங்கள்.

படிமுறை 2

- தமது காலணிகளை கழற்றி ஒழுங்காக ஒரு இடத்தில் வைப்பதற்கு மாணவரை வழிகாட்டுங்கள்.
- நீங்கள் இருக்கும் நிலை புரிகின்றதா?
- உங்கள் உடலின் பாரம் கால்களுக்குத் தெரிகின்றதா?
- நீங்கள் நிற்கும் போது உங்கள் பாதம் உணர்வது என்ன?
- உங்கள் அடிப்பாதத்தில் உணர்கின்ற உணர்வு யாது?
- வன்மை, மென்மை, சூடு என உணர்கின்றீர்களா?
- உங்கள் முதுகு நேராக இருக்கின்றமையை உணர்கின்றீர்களா?
- தெரிவு செய்த இடத்தில் அங்குமிங்கும் நடப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள். பின்னர் நடக்கும் வேகத்தை அதிகரிக்கச் செய்யுங்கள்.
- வலது காலை வைக்கும்போது வலது காலுக்கும் இடது காலை வைக்கும்போது இடது காலுக்கும் உணர்வு புரிகின்றதா என மாணவர்களிடம் வினவுங்கள்.
- குளிர் மற்றும் சூடு, வன்மை, மென்மை என்பவற்றில் அவதானம் செலுத்தி அவற்றை உணர்ந்தவாறு நடப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

படிமுறை 3

- பலத்தோடு நடந்து செல்லும் தாம் பெற்ற அனுபவத்தை ஒவ்வொருரிடமும் வினவுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தமது அனுபவத்தைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- பலத்தோடு நடப்பதன் பயனை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- ஆரோக்கியமான வாழ்வுக்கு உறுதியாக நடப்பதால் கிடைக்கும் பயன்கள் பற்றி மாணவரை அறிவுறுத்துங்கள்.

- சிறுவயது முதல் உறுதியோடு செயற்பட வேண்டும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- மாணவருடன் நற்சிந்தனை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கிறிஸ்துவின் அன்பு, கருணை, இரக்கம் போன்ற குணாதிசயங்களை மேலோங்கச் செய்து விளங்குங்கள்.
- பாடசாலையிலும் வீட்டிலும் அன்பு, கருணையை வெளிப்படுத்தும் விதம் பற்றிய கருத்துக்களை மாணவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் பாடலை மாணவருடன் இணைந்து தாளத்துடன் பாடுங்கள்.

தொடும் என் கண்களையே உம்மை நான் காண வேண்டுமே

இயேசுவே உம்மையே நான் காண வேண்டுமே

- கைளை உயர்த்தி மாணவருடன் இணைந்து பாடுங்கள்.

தொடும் என் கைகளையே உம் பணி செய்ய வேண்டுமே

இயேசுவே உம் பணி செய்ய வேண்டுமே

- மாணவர் காலணிகளை அணிந்து கொண்டபின் அவர்களை ஒழுங்காக வகுப்பறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

படிமுறை 4

- கிறிஸ்து இயேசு எம்மோடு இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
- மாணவர் மனதில் பின்வரும் மனப்பாங்குகளை மேலோங்கச் செய்யுங்கள்.
    - பிறரை அன்பு செய்தல்
    - மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல்
    - எப்போதும் கருணை காட்டுதல்
    - நாம் யாரை அன்பு செய்ய வேண்டும்?
    - விசேடமாக எமது அன்பை எதிர்பார்ப்பவர்கள் யார்?
    - நாம் மற்றவர்களுடன் எதனைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்?
    - நாம் மற்றவர்களுடன் எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும்?
    - இயேசு கிறிஸ்து யாரிடம் அன்பு காட்டினார்?
    - இயேசு கிறிஸ்து யாரிடம் கருணை காட்டினார்?
- மாணவர் கருத்துக்களை வினவுங்கள். அவர்கள் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- அன்பு, கருணை, பகிந்துகொள்ளல் ஆகிய பண்புகள் இருக்கும் இடத்தில் இறைவன் இருகின்றார் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

- நாங்கள் இறைவன் பெயரால் ஒன்றுகூடியிருக்கும் போது எம்முடன் இறைவன் இருப்பார் என்பதை என்பதை விளக்கிக் கூறுங்கள்.
- மாணவரை அமைதியாக இருத்தி பின்வரும் வரிகளைத் தாளத்துடன் பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**எனது மனம் தூய்மையானது தூய்மையானது தூய்மையானது**

**எனது மனம் அமைதியானது அமைதியானது அமைதியானது**

**எனது மனம் சாந்தமானது சாந்தமானது சாந்தமானது**

**எனது மனம் தூய்மையானது, அமைதியானது, சாந்தமானது**

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- காணிக்கைப் பாடலை பாடுங்கள்.
- மாணவர்கள் பலத்துடன் நடக்கும் படத்தை நிறந்தீட்டுங்கள்.
- மாணவர் செயல்நூலில் உள்ள பாடலை மாணவருடன் இணைந்து தாளத்துடன் பாடுங்கள்.
- பூக்களை நிறந்தீட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- மனதை ஒருநிலைப்படுத்திப் பக்தியோடு தாம் கொண்டு வந்த பூக்களை இயேசுவின் திருச்சுரூபம் அல்லது படத்தின் முன்னால் வையுங்கள்.

- **கணிப்பீடு:**

| **மதிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு நியம இல** | **தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர்** | | **தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை** |
|---|---|---|---|---|
| | | **நிலை 1** | **நிலை 2** | **நிலை 3** |
| 11.1 நடந்து செல்லும் போது மிக பலத்துடன் நடப்பார். | 11.1.1 | நடந்து செல்கையில் சரியான நிலையில் பலத்துடன் நடப்பார். | நடந்து செல்லும் போது உதவியுடன் சரியான நிலையில் பலத்துடன் நடப்பார். | நடந்து செல்லும் போது சரியான நிலையில் செல்ல இடர்படுவார். பலத்துடன் நடக்க இடர்படுவார். |
| 11.2 நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்ற வன்மை, மென்மை, வரட்சி, ஈரம், சூடு, குளிர் ஆகியவற்றை இனங்கண்டு கொண்டு நடப்பார். | 11.2.1 | நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்றவற்றைக் கூறுவார். | நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்றவற்றை வழிகாட்டிய பின்னர் கூறுவார். | நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்றவற்றைக் கூறுவதற்கு இடர்படுவார். |